RE/MAX Realtron Blue Force
TEAM BLUE FORCE
வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
DIRECT 416 2888882
கவாஸ் - சோம சச்சிதானந்தன்

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
வீடு விற்பனை முகவர்
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANCE COVERAGE
AUTO, HOME, BUSINESS
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710

மலர்:- 29, 18 நவம்பர் 2022 இதழ்:- 30

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan LL.B
Barrister & Solicitor and Notary Public
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax: 1-800-878-1348
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

## இலங்கைப் பிரச்சனையில் மத்தியஸ்தத்துக்கு தயார் இந்தியாவுக்கான நோர்வே தூதுவர் தெரிவிப்பு!



இலங்கையின் இனப்பிரச்னைக்கு காரண மான இரு தரப்புகளிலிருந்தும் அழை ப்பு வந்தால் மீண்டும் நோர்வே மத்தி யஸ்தம் வகிக்கும் என்ற சாரப்பட கரு த்து வெளியிட்டுள்ளார் இந்தியாவுக்கான நோர்வை தூதுவர் ஹான்ஸ் ஜேக்கப் பிரைடன்லண்ட். இந்தியாவுக்கான நோர்வே தூதுவர் 13 நவம்பர் 2022 இந்தியாவின் பிரபல நாளிதழான இந்து பத்திரிகை குழுமத்துக்கு சென்றிருந் தார். அங்கு ஆசிரியர் குழுவை சந்தித் தார். இதன் போது அவர்களின் கேள்வி களுக்கும் பதிலளித்தார். (3ம்பக்கம்)

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

BASKARAN SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE
Commercial
Industrial
Investment
baskaran.toronto@hotmail.com

## ராஜீவ்காந்தி கொலை வழக்கில் விடுதலையாகிய இலங்கையர்கள் தாயகம் செல்ல முடியுமா?

GT Brokers
Protect You & Your Family
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances,
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Independent Insurance Advisor
Dir: 416 528 1407
www.gtbrokers.ca
Super Visa Insurance
100% Refund





இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் படுகொலை வழக்கில் தண்டனை அனுப வித்து வந்த 6 பேரையும் விடுதலை செய்ய இந்திய உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்திருக் கிறது. அந்த ஆறு பேரில் நால்வர் இலங்கை பிரஜைகள். நளினியின் (7ம் பக்கம் பார்க்க)

BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage*
Tel : 905-201-9977 Fax : 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8
*INDEPENDENTLY OWNED AND OPERATED

## பதவியைத் தொடர ரணில் வியூகம்! ராஜபக்ஷாக்களின் ஆதரவு கிடைக்குமா?

தன்னுடைய நிறைவேற்று அதிகார அதிபர் பதவிக் கால த்தை நீடிப்பதற்காக பாராளுமன்றத்தின் அங்கீகாரத் துடன் சர்வஜன வாக்கெடுப்பு (16ம் பக்கம் பார்க்க)

## யாழ்.நகரில் வீதியெங்கும் இராணுவம்!

உங்கள் உறவுகள் எங்களால் இணைகிறது
15 வருடங்களுக்கு மேலாக உங்களோடு நாங்கள்
24/7 365
AERO COURIER
Fast & Secure World Wide Service
416.292.0444
151 Nashdene Rd, Unit 01, Scarborough ON, M1V 4C4

போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்!
உறவுகளே! நவம்பர் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

BUY/SELL HOUSES
ARUL THANINAYAGAM
Sales Representative
Direct : 416-624-7971 Office : 416-298-3200
Flexible Commission
HOMELIFE
TODAY REALTY LTD. BROKERAGE

KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
சிவில் வழக்குகள் / Civil Litigation
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

“ஒரு முகவர் இரு சேவைகள்”
“One Broker Two Services”
Roshan Wignarajah
Real Estate Sales Rep./ Mortgage Broker
416-716-5946
rwignara@gmail.com
RE/MAX Royal Properties
Phone: (416) 321-0110
MORTGAGE ALLIANCE


THINKING OF
SELLING OR BUYING A HOME?
Siva Kandiah
Sales Representative
Dir: 416-301-9540
sivakandiahhome@gmail.com
Team SIVA
WILL BRING THE BEST RESULTS!
Piravien Siva
B.Comm.
Sales Representative
Dir: 647-221-5220
piravien@gmail.com
18 Years Real Estate Experience
HomeLife Today Realty Ltd.,
Brokerage. INDEPENDENTLY OWNED AND OPERATED
*Listing Agent's Commission plus 2.5% Buyer's Agent commission- Conditions apply
HOMELIFE
HIGHER STANDARDS
Bus: 416.298.3200
11 Progress Avenue, Suite 200, Toronto, ON. M1P 4S7
NOT INTENDED TO SOLICIT PROPERTIES ALREADY UNDER CONTRACT
• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY
Lawrence / Morningside
Scarborough $499,800
Bedrooms: 3 Washrooms: 2
Shops 24 Hours Bus Route
Dixie & Clark
Brampton $539,900
Bedrooms: 3 Washrooms: 2
Beautiful Corner Unit! Upgraded
Sheppard & Warden
Scarborough $595,900
Bedrooms: 2+1 Washrooms: 2
Renovated Suite, Open Balcony
Mccowan/Hwy 401
Scarborough $599,900
Bedrooms: 2 Washrooms: 2
Open Concept Suite, Laminate Fl
Eglinton & Mccowan
Scarborough $620,000
Bedrooms: 3+1 Washrooms: 2
Location Location Location!!!
Yonge St & Finch Ave
Toronto $698,000
Bedrooms: 2 Washrooms: 2
Steps To Yrt, Go Bus.
Eglinton/Markham
Scarborough $839,000
Bedrooms: 3 Washrooms: 2
Renovated W/O To the Balcony
Simcoe & Ritson
Oshawa $850,000
Bedrooms: 3+3 Washrooms: 2
Perfect For Investors
Simco St N/ Darcy
Oshawa $1,298,000
Bedrooms: 3+1 Washrooms: 4
Updated Open Concept Kitchen
Markham & Major Mackenzie
Markham $1,649,000
Bedrooms: 4+2 Washrooms: 4
Approx 3,450 Of Living Space
Keele/Sheppard
Toronto $855,000
Bedrooms: 3 Washrooms: 2
*Investment Property*!
401 & Mccowan Rd
SOLD
Scarborough $599,900
Bedrooms: 2 Washrooms: 2
Location! Location! Location!
Bellamy & Lawrence
FOR LEASE
Scarborough $2,850
Bedrooms: 3 Washrooms: 2
$$$ Spent On Upgrades
Mclevin & Neilson
FOR LEASE
Scarborough $2,600
Bedrooms: 2 Washrooms: 2
Renovated Brand New Kitchen
Markham & Denison
FOR LEASE
7325
Markham $2,300
Bedrooms: 1+1 Washrooms: 1
Upgraded & Maintained Like New
Thickson & Burns
FOR LEASE
Whitby $2,250
Bedrooms: 3 Washrooms: 3
Close To 401 Exit And Go Train
PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!

**EELANADU**
105 DINSDALE DR
WOODBRIDGE - ON
L4H 2M4 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

# இலங்கைப் பிரச்சனையில் மத்தியஸ்தத்துக்கு தயார் இந்தியாவுக்கான நோர்வே தூதுவர் தெரிவிப்பு!

இலங்கையின் இனப் பிரச்னைக்கு காரணமான இரு தரப்புகளிலிருந்தும் அழைப்பு வந்தால் மீண்டும் நோர்வே மத்தியஸ்தம் வகிக்கும் என்ற சாரப்பட கருத்து வெளியிட்டுள்ளார் இந்தியாவுக்கான நோர்வை தூதுவர் ஹான்ஸ் ஜேக்கப் பிரைடன்லண்ட். இந்தியாவுக்கான நோர்வே தூதுவர் 13 நவம்பர் 2022 இந்தியாவின் பிரபல நாளிதழான இந்து பத்திரிகை குழுமத்துக்கு சென்றிருந்தார். அங்கு ஆசிரியர் குழுவை சந்தித்தார். இதன்போது அவர்களின் கேள்விகளுக்கும் பதிலளித்தார்.

இலங்கையில் இனப் பிரச்சனை உள்ளிட்ட பிரச்சனைகளுக்கு மத்தியஸ்தம் வகிக்க நோர்வே ஆர்வம் காட்டுமா என்ற கேள்விக்கு பதிலளித்த நோர்வே தூதுவர்,

இரு தரப்புகளில் இருந்தும் அழைக்கப் படாமல் நாங்கள் செல்லமாட்டோம். இரு தரப்பில் இருந்தும் அழைக்கப்படாவிடின் நாங்கள் அதனைக் கருத்தில் கொள்ள மாட்டோம். ஏனென்றால், முன்னெடுக்கும் விடயங்கள் மிகவும் கடினமாக இருக்கும்.

நாங்கள் ஒரு சிறிய நாடு. நம்மை நாமே திணிக்க முடியது என்றார்.

இதேவேளை, இலங்கைக்கான நோர்வேயின் முன்னாள் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹய்ம் சர்வதேச காலநிலை ஆலோசகராாக மீண்டும் இலங்கை வந்துள்ளமை குறித்து எழுப்பப்பட்ட வினாவுக்கு பதிலளித்த அவர்,

சொல்ஹெய்ம் நோர்வேயின் உத்தியோக பூர்வ பிரதிநிதி அல்ல. அவர் தனது தனிப்பட்ட திறன் - தொடர்பிலேயே செயல்படுகிறார் என்றும் கூறினார்.



இதேவேளை வடக்கு, கிழக்கில் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் அனைத்துப் பிரச்சனைகளுக்கும் விரைந்து தீர்வு காணப்பட வேண்டும். இந்த விவகாரத்தில் ஐக்கிய நாடுகள் சபையின் பங்களிப்பு மிகவும் காத்திரமாக இருக்க வேண்டும். இவ்வாறு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், கூட்டமைப்பின் பங்காளி கட்சிகளின் தலைவர்கள் கூட்டாக வலியுறுத்தியுள்ளனர். ஐக்கிய நாடுகள் சபையின் அரசியல் பிரிவின் இயக்குநர் அடங்கலான குழுவினரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் சந்தித்துக் கலந்துரையாடினர். இதன்போதே அவர்கள் மேற்கண்டவாறு வலியுறுத்தினர்.

கொழும்பிலுள்ள ஐ.நா. அலுவலகத்தில் சுமார் ஒரு மணி நேரத்துக்கும் மேலாக இடம் பெற்ற இந்த சந்திப்பில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் அதன் தலைவர் இரா. சம்பந்தன், பேச்சாளர் எம். ஏ. சுமந்திரன், பங்காளி கட்சிகளின் தலைவர்களான மாவை சேனாதிராசா, செல்வம் அடைக்கலநாதன், தர்மலிங்கம் சித்தார்த்தன் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்தச் சந்திப்பில் அரசியல் உறுதிப் பாடற்ற நிலைமை பற்றியும் வடக்கு, கிழக்கில் தொடர்ந்து இடம் பெறும் நில ஆக்கிரமிப்பு பற்றியும் கூட்டமைப்பு வலியுறுத்தியது என்று சுமந்திரன் கூறினார்.

# ராஜீவ்காந்தி கொலை வழக்கில் விடுவிக்கப்பட்டவர்கள் இலங்கைக்கு நாடு கடத்தப்படவுள்ளனர்?

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் படுகொலையில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டப்பட்டு, சிறைத்தண்டனைக்கு பின்னர், உயர் நீதிமன்றத்தால் அண்மையில் விடுவிக்கப்பட்ட நான்கு இலங்கை பிரஜைகளும், அவர்களது சொந்த நாட்டிற்கு நாடு கடத்தப்படுவார்கள் என்று இந்திய மத்திய உள்துறை அமைச்சக தரப்புக்கள் தெரிவிக்கின்றன.

சிறையில் இருந்து விடுவிக்கப்பட்ட முருகன் (ஸ்ரீஹரன்), ரொபர்ட் பயஸ், எஸ் ஜெயக்குமார் மற்றும் டி சுதேந்திரராஜா என்ற சாந்தன் ஆகிய நால்வரையும் நாடு கடத்துமாறு தமிழக அரசுக்கு மத்திய உள்துறை அமைச்சகம் உத்தரவு பிறப்பித்துள்ளது. இந்த நால்வரும் தற்போது திருச்சியில் சிறப்பு முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

அவர்கள், இலங்கைக்கு நாடு கடத்தப்படுவதற்கு முன்னர் சில சட்ட நடைமுறைகள் பூ ர்த்தி செய்யப்பட வேண்டும் என்று அந்த தரப்புக்கள் தெரிவித்துள்ளன. எனினும் அவர்கள் நாடு கடத்தப்படுவதற்கான காலக்கெடு அல்லது குறிப்பிட்ட திகதி எதுவும் நிர்ணயிக்கப்படவில்லை. இந்த விடுதலை மற்றும் நாடு கடத்தல்கள் தொடர்பில் இந்திய வெளிவிவகார அமைச்சின் மூலம் இலங்கை அரசாங்கத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை விடுவிக்கப்பட்ட சிலர் இலங்கையைத் தவிர வேறு நாடுகளுக்குச் செல்ல விரும்புவதாகக் கூறப்படும் நிலையில், அதில் தமிழ்நாடு அரசாங்கத்திற்கு எந்த ஆட்சேபனையும் இருக்காது. எனினும் இது மற்ற நாடுகளின் விசாக்கள் கிடைப்பதை பொறுத்தது என்று தமிழக அரச அதிகாரி ஒருவரைக் கோடிட்டு இந்திய செய்தித்தளம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

## வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழு நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கியமான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்புவோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலைபேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனை த்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்டவர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகையிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப்பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடையாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
**eelanadu.ca**
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

## உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையின்
## 30வது ஆண்டு விழா:-
## 23 ஏப்ரல் 2023
## “சங்கீத சங்கமம் 2023”

**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
**Barrister, Solicitor & Notary**
குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்
**2401 Eglinton Ave East, Suite 300**
**Toronto, Ontario M1K 2M5**
**416 755 5544**


# சம்பந்தர் - மாவை - சுமந்திரன் கூடினர்! கலைந்தனர்!



வடகிழக்கில் சமஷ்டி அடிப்படையிலான அதிகாரப்பகிர்வே தமிழ் தேசிய பிரச்சனைக்கான தீர்வு என்பதைஒருபவ் வடகிழக்கு தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகள் ஒன்றாக வலியுறுத்துவதற்காக, 15 நவம்பர் 2022 செவ்வாய்க்கிழமை மாலை கொழும்பில் உள்ள சம்பந்தனின் இல்லத்தில் ஒன்றுகூடுமாறு வடகிழக்கை பிரதிநித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளுக்கு பகிரங்க அழைப்பு விடுக்கப்பட்டிருந்து.

குறித்த அறிவிப்பை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப்பேச்சாளரும் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தான் ஊடகங்களின் ஊடாக வெளியிட்டிருந்தார்.

குறித்த அறிவிப்பு ஊடகங்களின் ஊடாக வெளியிடப்பட்டதை அடுத்து, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக்கட்சிகளான தமிழரசுக்கட்சி, புளொட், ரெலோ ஆகியன கூட்டத்துக்கான அழைப்பு பற்றி தாம் அறிந்திருக்கவில்லை என்று தெரிவித்ததோடு, குறித்த அறிவிப்புக்கான தீர்மானம் எப்போது யாரால் எடுக்கப்பட்டது என்பது தொடர்பில் குழப்பங்கள் காணப்பட்டது.

இந்நிலையில், சுரேஷ்பிரேமச்சந்திரன், விக்னேஸ்வரன், செல்வம் அடைக்கலநாதன், சித்தார்த்தன் ஆகியோருடன் சுமந்திரன் தொலைபேசி வாயிலாக கூட்டத்திற்கான அழைப்பினை விடுத்ததாக தெரிவித்துள்ளார்.

இதேநேரம் 15 நவம்பர் 2022 காலையில் ஐ.நா.அதிகாரிகளுடனான சந்திப்பின் போது சம்பந்தன் செல்வம் அடைக்கலநாதனிடத்தில் கூட்டத்திற்கு வருமாறு அழைப்பு விடுத்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், முறையான அழைப்புக்கள் விடுக்கப்படாமை, மற்றும் குறுகிய கால இடைவெளியில் அழைப்பு விடுகப்பட்டமை ஆகிய காரணங்களால் குறித்த கூட்டத்தில் பங்கேற்பது மிகக் கடினமான விடயம் என்பதை செல்வம் அடைக்கலநாதன், சித்தார்த்தன் மற்றும் சுரேஷ்பிரேமச்சந்திரன் ஆகியோர் மாவை. சோ.சேனாதிராஜாவிடத்தில் தெரிவித்துள்ளனர்.

இதற்கமைவாக நண்பகலளவில் குறித்த கூட்டத்தினை ஒத்திவைப்பதாக மாவை. சோ.சேனதிராஜா செல்வம் அடைக்கலநாதன் மற்றும் சித்தார்த்தனுக்கு தெரிவித்தாக சித்தார்த்தன் குறிப்பிடுகின்றார்.

இவ்வாறான நிலையில் மாலையில் திட்டமிட்டபடி குறித்த கூட்டத்திற்கான நேரத்தில் தமிழரசுக்கட்சியின் முக்கிய தலைவர்கள் மூவரும் கூடிக்கலந்துரையாடியுள்ளனர்.

கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன், மாவை.சோ.சேனாதிராஜா மற்றும் சுமந்திரன் ஆகியோர் சம்பந்தனின் இல்லத்தில் கூடியுள்ளனர். இவர்கள், தமது கட்சி தமிழ் மக்களின் அபிலாஷைகளை வென்றெடுப்பதற்காக இணைந்த வட, கிழக்கில் அதிகாரப்பகிர்வுடான சமஷ்டி அடிப்படையிலான தீர்வொன்றை பெற்றுக்கொள்வதை நோக்கமாக கொண்டே ஆரம்பிக்கப்பட்டது.

அந்த அடிப்படையில், தற்போதும் அதே கொள்கையின் பிரகாரம், ஜனாதிபதி ரணிலின் அறிவிப்புக்கு அமைவாக பேச்சுவார்த்தை முன்னெடுக்கப்படும் பட்சத்தில் சமஷ்டி அடிப்படையிலான தீர்வினையே வலியுறுத்துவதென்றும் தீர்மானித்துள்ளனர். அத்துடன், குறித்த பேச்சுவார்த்தைகளின்போது சமஷ்டி அடிப்படையிலான தீர்வினை வலியுறுத்தும் ஏனைய தரப்பினர் தம்முடன் இணைந்து செயற்பட விரும்பினால் அவர்களையும் இணைத்து தொடர்ச்சியான செயற்பாடுகளை முன்னெடுப்பதெனவும் இணக்கப்பாட்டிற்கு வந்துள்ளனர்.

மேலும், குறித்த சந்திப்பின் போது, செல்வம் அடைக்கலாநதன் குறித்த கூட்டத்திற்கு வருவதாக தெரிவித்திருந்த போதும் தான் கூட்டத்திற்கு வரும் வழியில் ஏனைய தலைவர்களும் பங்கேற்பதற்கு ஏதுவான வகையில் பிறிதொரு தினத்தில் கூட்டத்தினை நடத்த வேண்டும் என்று தன்னைக் கோரியதாக மாவை.சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், அவர்களுக்கு பொருத்தமான காலத்தில், பொருத்தமான இடத்தில் முறையான அழைப்பினை விடுத்து கூட்டமொன்றை நடத்துவதற்கான ஏற்பாட்டை நீங்கள் முன்னெடுங்கள் நான் எந்த இடமென்றாலுத் அதில் பங்கேற்பதற்கு தயராகவே உள்ளேன்'' என்று சம்பந்தன் மாவை.சேனாதிராஜா விடத்தில் கூறியதோடு ஏற்பாடுகளை மேற்கொள்ளும் பொறுப்பினை நீங்களே மேற்கொள்ளுங்கள்'' என்றும் சம்பந்தன் தெரிவித்துள்ளார். இந்த விடயங்களை கூட்டத்தில் பங்கேற்றிருந்த சுமந்திரன் உறுதிப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது.

இது இவ்வாறிருக்க கடந்தகால கசப்பான விடயங்களிலிருந்து மீள்வதற்கு தமிழர்களுக்கு மீண்டும் ஒரு அதியுச்ச சந்தர்ப்பம் கிட்டியுள்ளதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

வடக்கு மக்கள் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகளுக்கு அடுத்த வருடத்திற்குள் தீர்வு வழங்க அப்பகுதி பிரதிநிதிகளுடன் பேச்சுக்களை முன்னெடுக்கப் போவதாக அதிபர் அறிவித்துள்ளார்.

மேலும் தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கான அமைச்சரவை உபகுழுவொன்றையும் அதிபர் ரணில் விக்ரமசிங்க அமைத்துள்ளார். அதிபரின் இந்த அறிவிப்பு குறித்து கருத்து வெளியிடும் போதே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மேலும் இந்தச் சந்தர்ப்பத்தினை தற்போதுள்ள தமிழ்த் தலைவர்கள் சரியாகப் பயன்படுத்த வேண்டும் என்றும் தாமும் அதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்




ரொரன்ரோ அல்பியன் பகுதியில் கோவில் கொண்டிருக்கும்

கனடா – அருள்மிகு

ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்

1771 Albion Rd., Unit #1, Toronto, ON M9W 5S7 (Albion & Hwy 27)

Tel: 416.213.0110 • www.shrimuththumaari.cin

ஆலயம் திறந்திருக்கும் நேரம்
காலை 9.00 மணி முதல் 1.00 மணி வரை
மாலை 5.00 மணி முதல் 9.00 மணி வரை

பூசை நேரம்:
பகல் 12:00 முதல் மாலை 7:30
உற்சவ காலங்களில் பூசை நேரங்கள் மாற்றம் அடையலாம்



அம்பாள் அடியார்களே!

27 நவம்பர் 2022 –ஞாயிறுக்கிழமை

அன்று மதியம் 12.00 மணிக்கு மண்ணிற்காக மரணித்த மக்களுக்கும் மாவீரர்களுக்கும் விஷேட ஆத்மசாந்தி பூஜை நடைபெறும்.

அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம் அன்னதானமும் வழங்கப்படும்

16 நவம்பர் 2022 புதன்கிழமை

ஐயப்பன் மண்டல பூஜை ஆரம்பம் .

ஐயப்பன் மாலை போட விரும்பும் ஐயப்ப பக்தர்கள், ஐயப்ப படிகட்டுப் பூஜை செய்ய விரும்பும் பக்தர்கள் ஆலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

21 நவம்பர் 2022 திங்கட்கிழமை

சோம பிரதோஷ விரதம்

இரவுப் பூஜை மாலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும்

# தமிழர் மரபியல் நடுவம் நடத்திய பொதுமக்களுக்கான கலந்துரையாடல்

கடந்த நவம்பர் 12 சனிக்கிழமை காலை 9.00 மணியளவில் ஸ்காபரோ சிவிக் சென்ரரில் தமிழர் மரபியல் நடுவத்தினரின் பொதுமக்களுக்கான முதலாவது கலந்துரையாடல் இடம்பெற்றது. இந்நிகழ்வுக்கு நடுவத்தின் இயக்குநர் அவைத் தலைவர் திரு குமார் அழகரெத்தினம் அவர்கள் தலைமை தாங்கினார். ஏனைய உறுப்பினர்களான திரு லோகன் சேனாதி, திரு கஜன் ஆறுமுகம், திரு ஸ்ரீஜகன் லோகேஸ்வரன், திரு யோகேஸ்வரன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

மேற்படி தமிழர் மரபியல் நடுவமானது ஈழத்து மண்ணில் தேச விடுதலைக்காக இன்னுயிர் நீத்த மாவீரர்கள் நினைவாக காலத்தால் அழியாது போற்றிப் பாதுகாக்கப்படும் மாவீரர் நினைவாலயம் மற்றும் தமிழர் பெருமையை எடுத்தியம்பும் வரலாற்று ஆவணங்களைச் சேகரிக்கும் ஓர் இடமாகவும் தமிழர்களது பாரம்பரிய கலை கலாச்சார விழுமியங்களைப் போற்றிப் பாதுகாக்கும் இடமாகவும் எதிர்காலத்தில் தமிழர் மரபியல் நடுவம் அமையும் என்று திரு குமார் அழகரெத்தினம் அவர்கள் தனது தலைமையுரையில் தெரிவித்தார்.

சுமார் 48 ஏக்கர் பரப்பளவு கொண்ட இடத்தில் அமையவுள்ள தமிர் மரபியல் நடுவம் சுமார் நாலரை மில்லியன் டொலர்களுக்கு வாங்கப்பட்டுள்ளது. இதில் சுமார் இரண்டு மில்லியன் டொலர்கள் தமிழ்த்தேசிய உணர்வாளர்களிடம் இருந்து நன்கொடையாகப் பெறப்பட்டுள்ளது. மீதி இரண்டரை மில்லியன் டொலர்கள் வங்கியில் அடமானக் கடனாக உள்ளதாகவும் மாதாந்தம் 11500 டொலர்கள் செலுத்தப்படுவதாகவும் மரபியல் நடுவத்தின் பொருளாளர் திரு லோகன் சேனாதி அவர்கள் தெரிவித்தார்.

நீண்டதொரு பாரிய வேலைத் திட்டத்தின் முதற் கட்டமாக வங்கிக்குச் செலுத்த வேண்டியுள்ள கடனைச் செலுத்த வேண்டியுள்ளதால் கனடா வாழ் அனைத்துத் தமிழ்மக்களும் இணைந்து இப் பணியை விரைந்து முடிப்பதற்கு ஒத்துழைக்க வேண்டுமென நடுவத்தின் செயலாளர் திரு கஜன் ஆறுமுகம் தனதுரையில் தெரிவித்தார்.

சபையோரில் சிலர் எழுப்பிய சந்தேகங்களுக்கும் கேள்விகளுக்கும் நிறைவான பதில்களை வழங்கினார்கள்.

எமது தாயகத்தில் சிங்கள பௌத்த பேரினவாதம் எங்கள் மாவீரர் கல்லறைகளைக் கிளறியெறிந்து அதன் மேல் ஆக்கிரமிப்பு முகாம்களை அமைத்து மாவீரர் நினைவுகளை தடை செய்துள்ள போதிலும் உலகின் எந்தவொரு மூலை முடுக்கிலும் மானமுள்ள ஒரு தமிழன் வாழும் வரை மாவீரர்கள் நினைவுகள் வாழ்ந்து கொண்டே இருக்கும் என்பதை தேசத்திற்கு வெளியே முதன்முதலாக உலகில் கனடா மண்ணில் அமையவுள்ள தமிழர் மரபியல் நடுவம் உணர்த்தி நிற்கும் என்பதில் சந்தேகமில்லை.

காலம் எமக்குத் தந்திருக்கின்ற ஒரு வரலாற்றுக் கடமையை நாம் நிறைவேற்றி எமது அடுத்த தலைமுறை இலட்சியக் கனவுகளை சுமந்து செல்ல நாம் வழி செய்ய வேண்டும்

.இப்பாரிய வேலைத்திட்டம் விரைவில் நிறைவேற ஒவ்வொரு தமிழர்களும் தங்களால் முடிந்தளவு நிதிப் பங்களிப்பினை நல்க வேண்டும். குறிப்பிட்ட காலத்தில் கேளிக்கை நிகழ்வுகளில் கலந்து கொள்ளாது பணத்தைச் சேமித்து இப்பாரிய- வரலாற்றுப் பணிக்கு உதவுவோம் என்று ஒவ்வொரு தமிழனும் மாவீரர் நினைவுகள் மீது சத்தியம் செய்வோம்.

தாயகக் கனவுடன் கல்லறையில் துயிலும் அவர்கள் கனவுகள் நனவாகி தமிழர் தம் தேசம் மலரும் என்ற நம்பிக்கை கொள் வோம். நம்பிக்கை தான் வாழ்க்கை. பயணங்கள் தொடரட்டும். துணை நிற்போம்.

# கோத்தாவைக் கொலை செய்ய திட்டம்?

## அமெரிக்கத் தூதுவர் மீது சந்தேகம் எழுப்பும் விமல்வீரவன்ச

கடந்த ஜீன் மாதம் 9ஆம் திகதி கோட்டையில் உள்ள ஜனாதிபதி மாளிகைக்குள் போராட்டக்காரர்கள் நுழைந்த போது முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவை கொலை செய்ய திட்டம் தீட்டப்பட்டதாக, உத்தர லங்கா கூட்டணியின் தலைவர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

தொலைக்காட்சி ஒன்றில் அரசியல் கலந்துரையாடல் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட போதே அவர் இந்த தகவலை வெளியிட்டுள்ளார். இந்தத் திட்டத்திற்கு முன்னர், அமெரிக்கத் தூதுவர் ஜீலி சங் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவைக் காப்பாற்றுமாறு, தாம் இறைவனிடம் பிரார்த்தித்ததாகவும், இதன் இறுதி விளைவு முன்னாள் ஜனாதிபதியை கொலை செய்வதாகும் என்றும் விமல் வீரவன்ச குறிப்பிட்டுள்ளார்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் மாளிகைக்குள் நுழையும் வரை முன்னாள் ஜனாதிபதிக்கு அந்த விடயம் தெரியாது. அத்துடன், ஜனாதிபதி மாளிகைக்குள் இருந்த பாதுகாப்புத் தலைவர் ஒருவர் கோட்டாபய ராஜபக்ஷவிடம் தவறான தகவலை அளித்து, (அண்டர் கொண்ட்ரோல் — **Under control Sir**) நிலைமை கட்டுப்பாட்டில் உள்ளது என்று குறிப்பிட்டிருந்தார்.

ஆனால் தற்செயலாக, முன்னாள் ஜனாதிபதி, தொலைக்காட்சி அலைவரிசை ஒன்றை பார்த்த போது, போராட்டக்காரர்கள் உள்ளே நுழைந்ததைக் கண்டார். அந்தத் தருணத்திலேயே மாளிகையின் பாதுகாப்பு நிலைமை குறித்து அவர் அறிந்து கொண்டதாக பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

எனவே லிபியாவின் முன்னாள் ஜனாதிபதி கேர்னல் கடாபி கொல்லப்பட்டது போன்று கோட்டாபய ராஜ பக்சவையும் கொல்லும் திட்டம் இருந்ததாகவும், அமெரிக்க தூதுவரின் பிரார்த்தனை கூட அந்த திட்டத்தின் ஒரு பகுதி யாகும் என்றும் விமல் வீரவன்ச சுட்டிக்காட்டியுள்ளார்.

தற்பொழுது ON LINE இல் வகுப்புகள்

Math & Physics Tutoring

(For High School Students)



Special Classes for IB, AP & University Students

Math: Grade 9-12, Advanced Functions,

Calculus & Vectors and Data Management.

Physics: Grade 11 & 12

கணித வகுப்புக்கள் தரம் 9 முதல் 12 வரை

பௌதீகவியல் வகுப்புக்கள் தரம் 11 முதல் 12 வரை

Instructor: S. Elancheliyan, B. Sc (Sri Lanka), B. Eng (Canada)

சி.இளஞ்செழியன்

Tel: 416-524-0424

# ராஜீவ்காந்தி கொலை வழக்கில் விடுதலையாகிய இலங்கையர்கள் தாயகம் செல்ல முடியுமா?

இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் படுகொலை வழக்கில் தண்டனை அனுபவித்து வந்த 6 பேரையும் விடுதலை செய்ய இந்திய உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்திருக்கிறது. அந்த ஆறு பேரில் நால்வர் இலங்கை பிரஜைகள். நளினியின் கணவரான முருகன் என்றழைக்கப்படும் ஸ்ரீஹரன், சாந்தன், ராபர்ட் பயஸ் மறறும் ஜெயகுமார் ஆகியோர் இலங்கையைச் சேர்ந்தவர். இவர்களில் சாந்தன் மற்றும் முருகன் ஆகியோர் இலங்கை கடவுச்சீட்டை கொண்டவர்கள். ராபர்ட் பயஸ் மற்றும் ஜெயகுமார் ஆகியோர் 1990ம் ஆண்டு தமிழகத்திற்கு பயணித்து, அங்கு அகதி அந்தஸ்த்தை கொண்டவர்கள்.

இவ்வாறு இந்த வழக்கில் விடுதலை செய்யப்பட்டுள்ள இந்த நான்கு இலங்கையர்களுக்கும் இலங்கைக்கு வருகைத் தர சந்தர்ப்பம் உள்ளதாக என்பது தற்போது கேள்விகுரியதாகியுள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பிற்கு இலங்கையில் தொடர்ந்து தடை அமலில் உள்ள நிலையில், விடுதலைப் புலிகளின் தாக்குதல் சம்பவம் தொடர்பில் இந்தியாவில் கைது செய்யப்பட்டு, விடுவித்து விடுதலையான இலங்கை பிரஜைகளால் நாட்டிற்கு மீள வர முடியுமா? என்ற கேள்வி எழுகிறது.



## இலங்கைக்கு வர முடியுமா?

ஒரு வேளை இலங்கைக்கு வருகை தரும் இவர்களை, விடுதலைப் புலிகளாக கருதி இலங்கை அரசாங்கம் அவர்களை மீள கைது செய்ய முடியுமா? இந்த வழக்கில் விடுதலை செய்யப்பட்ட இலங்கையர்கள், மீண்டும் நாட்டிற்கு வருகை தர சந்தர்ப்பம் உள்ளதா? என்பது குறித்து பிபிசி தமிழ், சட்ட நிபுணர்கள் சிலரிடம் வினவியது. இவ்வாறு எழுந்த கேள்விகளை, பிபிசி தமிழ், இலங்கையின் பிரபல ஜனாதிபதி சட்டத்தரணி யூ .ஆர்.டி.சில்வாவிடம் வினவியது.

அவர்களுக்கு இலங்கைக்கு வருகைத் தருவதில் எந்தவித பிரச்சினையும் கிடையாது. அவர்களுக்கு கடவுச்சீட்டு உள்ளது என்றால், அவர்களுக்கு விசா உள்ளது என்றால், நிச்சயமாக நாட்டிற்கு வருகை தர முடியும். எனினும், ஏதேனும் குற்றச்சாட்டு தொடர்பில் இவர்களின் பெயர்கள் சந்தேக நபர்களின் பெயர் பட்டியலில் சேர்க்கப்பட்டிருக்கும் பட்சத்தில், அவர்களை கைது செய்ய முடியும் என்கிறார் சில்வா.

இலங்கையில் தடை செய்யப்பட்ட அமைப்பு ஒன்றுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் இந்தியாவில் கைது செய்யப்பட்டு, விடுதலையாகியுள்ளவர்களை மீள அதே குற்றச்சாட்டு தொடர்பில் கைது செய்ய முடியுமா? என ஜனாதிபதி சட்டத்தரணி யூ .ஆர். டி.சில்வாவிடம் நாம் வினவினோம்.

அந்த குற்றச்சாட்டு தொடர்பில் கைது செய்ய முடியாது. இலங்கைக்குள் ஏதேனும் குற்றம் செய்திருக்க வேண்டும். உதாரணமாக விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளுக்கு நிதி வழங்கியிருந்தால், அல்லது வேறு விதமான ஒத்துழைப்புக்களை வழங்கியிருந்தால், அவர்களை கைது செய்ய முடியும்' என அவர் பதிலளித்தார்.



## மனிதஉரிமைகள் ஆணைக்குழவின் பதில என்ன?

இதே கேள்விகளை இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர் சட்டத்தரணி பிரதீபா மஹனாமஹேவாவிடம் நாம் வினவினோம்.

அவர்களுக்கு இலங்கைக்கு வருகைத் தர முடியும். விடுதலைப் புலிகள் அமைப்பிற்கு இலங்கையில் தொடர்ந்தும் தடை காணப்படுகின்றது. இவர்கள் உறுப்பினர்கள் என்றால், விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர்களின் பெயர்களும் கறுப்பு பட்டியலுக்குள் உள்வாங்கப்பட்டுள்ளது. இவர்கள் விடுதலைப் புலி உறுப்பினர்கள் என்ற சந்தேக நபர்கள் மாத்திரமே. எனினும், அவர்கள் விடுதலைப் புலிகள் என்ற பெயர் அவர்கள் மீது பொறிக்கப்படவில்லை.

வழக்கிலிருந்து முழுமையாக விடுதலை செய்யப்படுகின்றார்கள் என்றால், அவர்களுக்கு தண்டனை இல்லாது செய்தே, விடுதலை செய்யப்பட்டார்கள். அப்படி என்றால், அவர்களுக்கு அடிப்படை உரிமை உள்ளது. இலங்கை பிரஜையொருவருக்கு எந்தவொரு நேரத்திலும் இலங்கைக்கு வருகைத் தர முடியும்.

எந்தவொரு நேரத்தில் நாட்டை விட்டு வெளியேறவும் முடியும் என ஆட்டிக்கல் 14ல், இறுதியாக கூறப்பட்டுள்ளது. வேறு குற்றங்களை செய்திருந்தால்கைது செய்யப்படலாம். ஆனால் வேறு குற்றங்கள் கிடையாது.

அப்படி என்றால் கைது செய்ய முடியாது' என இலங்கை மனித உரிமை ஆணைக் குழுவின் முன்னாள் ஆணையாளர் சட்டத்தரணி பிரதீபா மஹனாமஹேவா தெரிவிக்கின்றார்.



## சந்தேகம் எழப்பும் தமிழ் சட்டத்தரணி

இதேவேளை குறித்த நான்கு பேரும் விடுதலைப் புலி உறுப்பினர்கள் என உறுதிப்படுத்தப்படும் பட்சத்தில், அது அவர்களுக்கு பிரச்சினையாக உருவாகலாம் என மூத்த சட்டத்தரணி இளையதம்பி தம்பையா பிபிசி தமிழுக்கு தெரிவிக்கின்றார்.

விடுதலைப் புலி உறுப்பினர்களாக இருந்து, அவர்கள் இந்த தாக்குதலை நடத்த உதவி செய்துள்ளார்கள் என குற்றப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டிருந்தால், அவர்களுக்கு பிரச்சினை உள்ளது. விடுதலைப் புலிகள் தடை விதிக்கப்பட்ட அமைப்பு.

இலங்கை அரசாங்கம் தடையை நீக்க வேண்டும். தடை செய்யப்பட்ட சிலரின் பெயர்களை, தடை பட்டியலிலிருந்து இலங்கை நீக்கியுள்ளது. இவர்கள் மீது தடை இருந்தால், அந்த தடையை நீக்க வேண்டும். இந்தியாவிலும் அவர்களுக்கு பிரச்சினை உள்ளது. அவர்களை முகாம்களுக்கே அனுப்புவார்கள். அவர்களை இந்தியாவில் நடமாட விட மாட்டார்கள். சொந்த நாட்டு பிரஜைகள் இல்லாதமையினால், அவர்களை முகாமிற்கே அனுப்புவார்கள். ஆனாலும், இந்தியா விஸா கொடுத்தால், அவர்களுக்கு அங்கு இருக்க முடியும். நாடு கடத்தினாலும், இலங்கை ஏற்குமா என்ற கேள்வி இருக்கின்றது. எங்களுக்கு இலங்கைக்கு போக முடியாது, தங்குமிட விசாவை வழங்குமாறு அவர்கள் கோரிக்கை விடுக்க முடியும்.

அதற்கு மறுப்பு தெரிவிக்கப்படும் பட்சத்தில், அந்த நாட்டு நீதிமன்றத்தை நாட முடியும். இவர்களை வருகைத் தர இலங்கை அனுமதி வழங்கினால், பிரச்சினை கிடையாது' என மூத்த சட்டத்தரணி இளையதம்பி தம்பையா குறிப்பிடுகின்றார்.

நன்றி – பிபிசி

## ராஜீவ்காந்தி கொலை வழக்கு:- 6 பேரையும் விடுதலை செய்தது உச்ச நீதிமன்றம்



ராஜீவ்காந்தி படுகொலை வழக்கில் ஆயுள் தண்டனை அனுபவித்துவந்த நளினி உள்ளிட்ட 6 பேரையும் இந்திய உச்ச நீதிமன்றம் விடுதலை செய்துள்ளது. இந்த வழக்கில் ஆயுள் தண்டனை அனுபவித்து வந்த பேரறிவாளன் கடந்த மே 18-ம் தேதி விடுதலை செய்யப்பட்டதை அடிப்படையாக வைத்து தங்களையும் அதே அடிப்படையில் விடுதலை செய்யவேண்டும் என்று கோரி, நளினி, ரவிச்சந்திரன் ஆகியோர் மனுச் செய்திருந்தனர். இதை விசாரித்த உச்ச நீதிமன்ற நீதிபதிகள் பி.ஆர்.கவாய், நாகரத்தினா ஆகியோர் அடங்கிய பெஞ்ச், இந்த வழக்கில் சுமார் 30 ஆண்டுகளாக சிறையில் இருக்கும் நளினி உள்ளிட்ட 6 பேரையும் விடுதலை செய்து 04 நவம்பர் 2022 வெள்ளிக்கிழமை உத்தரவிட்டது.

நளினி, அவரது கணவர் முருகன், சாந்தன், ராபர்ட் பயஸ், ரவிச்சந்திரன், ஜெயக்குமார் ஆகிய ஆறு பேரும் இந்த தீர்ப்பினால், விடுதலை பெற இருக்கிறார்கள். ஆயுள் தண்டனை பெற்று சிறையில் இருந்த இவர்களை முன்கூட்டியே விடுதலை செய்ய தமிழ்நாடு அரசு பரிந்துரைத்திருக்கிறது. அதன் அடிப்படையிலேயே இவர்களை விடுதலை செய்ய உத்தரவிடுவதாக நீதிபதிகள் தெரிவித்துள்ளனர். வேறு எந்த வழக்கிலாவது இவர்கள் சிறையில் இருப்பது தேவை இருந்தால் ஒழிய இவர்கள் உடனடியாக விடுதலை செய்யப்படவேண்டும் என்று நீதிபதிகள் தெரிவித்தனர்.

மனுதாரர்களான நளினி, ரவிச்சந்திரன் ஆகியோர் சிறையில் நன்னடத்தையை வெளிப்படுத்தியிருப்பதையும், இவர்கள் மிக நீண்ட காலம் சிறையில் இருப்பதையும் கணக்கில் எடுத்துக்கொள்வதாக நீதிமன்றம் தெரிவித்துள்ளது. நளினி முப்பது ஆண்டுகளுக்கு மேலாக சிறையில் இருக்கிறார். சிறையில் அவரது நடத்தை திருப்தி அளிக்கும் வகையில் உள்ளது. கணினி பயன்பாட்டில் அவர் பிஜி டிப்ளமா முடித்துள்ளார். ரவிச்சந்திரனின் சிறை நடத்தையும் திருப்தி அளிக்கும் வகையில் உள்ளது. சிறையில் அவர் பி.ஜி. டிப்ளமா உள்ளிட்ட பல்வேறு படிப்புகளைத் தொடர்ந்தார். பல்வேறு அறப் பணிகள் செய்தார்,' என்று குறிப்பிட்ட நீதிமன்றம், இருவரையும் விடுதலை செய்வதற்கான உத்தரவைப் பிறப்பித்தது.

பேரறிவாளன் வழக்கை அடிப்படையாக கொண்டு தங்களை விடுதலை செய்யவேண்டும் என்று கோரி இந்த இரண்டு பேரும் உச்ச நீதிமன்றத்தை நாடினர். கடந்த மே மாதம் அரசமைப்புச் சட்டத்தின் 142வது பிரிவில் உச்ச நீதிமன்றத்துக்கு வழங்கப்பட்டுள்ள உரிமையின் அடிப்படையில், 2018ம் ஆண்டு இவர்களை முன்விடுதலை செய்ய தமிழ்நாடு அரசு அளித்த பரிந்துரையின் அடிப்படையில் பேரறிவாளன் விடுதலை செய்யப்பட்டார். இதையடுத்து இந்த வழக்கில் 6 பேர் சிறையில் இருந்துவந்தனர். தற்போது விடுதலையாகும் 6 பேரில், நளினியின் கணவர் ஸ்ரீஹரன் என்ற முருகன், சாந்தன், ராபர்ட் பயஸ், ஜெயக்குமார் ஆகிய நான்கு பேர் இலங்கையைச் சேர்ந்தவர்கள். (21ம்பக்கம்)

# கடந்த காலங்களில் வாக்குறுதிகளை நிறைவேற்றி இருந்தால் இன்றைய அவலம் வந்திருக்காது - பேராசிரியர் திஸ்ஸ விதாரண



யுத்தம் முடிவடைந்ததன் பின்னர் தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைக்கு தீர்வு எட்டப்படும் என மஹிந்த ராஜபக்ஷ 2009ஆம் ஆண்டு சர்வதேசத்துக்கு வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றியிருந்தால் எவ்வித பிரச்சினையும் தற்போது ஏற்பட்டிருக்காது.

75ஆவது சுதந்திர தினத்துக்கு முன்னர் தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைகளுக்கு தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க குறிப்பிட்டுள்ளமை வரவேற்கத்தக்கது என லங்கா சமசமாஜ கட்சியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார். அவர் மேலும் குறிப்பிட்டாவது,

பயங்கரவாத தடைச் சட்டத்தினால் தமிழ் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். யுத்தம் நிறைவடைந்ததன் பின்னர் பயங்கரவாத தடைச் சட்டம் நீக்கப்பட்டு, புதிய சட்டம் உருவாக்கப்பட்டிருந்தால், நாடு சர்வதேச மட்டத்தில் சிறந்த அங்கீகாரத்தை பெற்றிருக்கும்.

யுத்தம் முடிவடைந்ததன் பின்னர் தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைகளுக்கு அரசியலமைப்பின் ஊடாக தீர்வு பெற்றுக் கொடுக்கப்படும் என அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சர்வதேசத்துக்கு வாக்குறுதி வழங்கினார்.

யுத்தத்தில் அடைந்த வெற்றியை தொடர்ந்து அவர் இரண்டாவது முறை ஜனாதிபதியாக பதவி வகிப்பது தொடர்பில் அக்கறை செலுத்தினாரே தவிர சர்வதேசத்துக்கு வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றுவதில் கவனம் செலுத்தவில்லை. இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில் தயாரிக்கப்பட்ட சர்வ கட்சித் தலைவர் குழு அறிக்கையின் பரிந்துரைகளை செயற்படுத்துவதிலும் அவர் கவனம் செலுத்தவில்லை. குறுகிய அரசியல் நோக்கத்துக்காக தமிழ் மக்களுக்கு வழங்க வேண்டிய நியாயமான தீர்வுகள் காலம் காலமாக தாமதப்படுத்தப்பட்டு வருகின்றமை முற்றிலும் தவறானதாகும்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வடக்கு மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பது குறித்து அக்கறை கொள்ளவில்லை. பதவி வகித்த இரண்டரை வருட காலத்தில் ஒரு முறை கூட அவர் வடக்குக்கு விஜயம் செய்யவில்லை. ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படுபவர் பதவிக் காலத்தில் ஒட்டுமொத்த மக்களையும் பிரதிநிதித்துவப்படுத்த வேண்டும்.

நாட்டின் 75ஆவது சுதந்திர தினத்துக்கு முன்னர் வடக்கு மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க குறிப்பிட்டுள்ளமை வரவேற்கத்தக்கது.

அரசியலமைப்புக்கு உட்பட்ட வகையில் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட வேண்டும் என்பதை தொடர்ந்து வலியுறுத்துவேன்.

நடைமுறையில் உள்ள பயங்கரவாத தடைச் சட்டத்தை முழுமையாக இரத்து செய்து, தேசிய பாதுகாப்புக்கு முன்னுரிமை வழங்கும் வகையில் நடைமுறைக்கு பொருத்தமான பாதுகாப்புச் சட்டத்தை உருவாக்க முழுமையான ஒத்துழைப்பு வழங்குவேன்.

அரசியல் பழி வாங்கலுக்காகவே பயங்கரவாத தடைச் சட்டம் தற்போது பயன்படுத்தப்படுகிறது.

ஆகவே பயங்கரவாத தடைச்சட்டம் முழுமையாக இரத்து செய்யப்பட்டு நவீன மனித உரிமை கொள்கையை அடிப்படையாக கொண்ட தேசிய பாதுகாப்புச் சட்டம் உருவாக்கப்பட வேண்டும் என்றார்.

## உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையின்
## 30வது ஆண்டு விழா:-
## 23 ஏப்ரல் 2023
## “சங்கீத சங்கமம் 2023”


# கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

## கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

- ✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை
- ✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது
- ✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.
- ✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

**Sri Vallipuranathar**

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: **416.439.0224**, Cell: **416.450.5011**

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com



# 12வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

# உறவுகளே! நவம்பர் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவ ருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக்குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர் காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

12 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 12 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள்.

இந்த வருடத்தில் ஒருநாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ?

ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக. தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும்.

ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்னதானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

12 நவம்பர் 2022 முதல் 18 நவம்பர் 2022 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர் களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது. கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதரவோடு கடந்த செப்டம்பர் முதல் 12வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

## மேலதிக விபரங்களுக்கு:-

## ஈழநாடு பரமேஸ் 416 841 9600

## 1வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி கமலம்மா கனகசபை

அனலைதீவைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டி ருந்த திருமதி கமலம்மா கனகசபை அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாள் 17 நவம்பர் 2022 வியாழக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தை களுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி கமலம்மா கனகசபைப் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினர் உறவினர்கள் நண்பர்கள் ஆகியோருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 3வது ஆண்டு நினைவஞ்சலி



### பேராசிரியர் பூபதி கதிர்காமநாதன்

யாழ்.குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும் இங்கிலாந்தை வாழ்விடமாகவும் கொண்டிருந்த பேராசிரியர் பூபதி கதிர்காமநாதன் அவர்களது மூன்றாவது ஆண்டு நினைவு நாள் 17 நவம்பர் 2022 வியாழக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். பேராசிரியர் பூபதி கதிர்காமநாதன் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினர் உறவினர்கள் நண்பர்கள் ஆகியோருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 10வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி அரியதுரை சரஸ்வதி

யாழ்.சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி அரியதுரை சரஸ்வதி அவர்களது பத்தாவது ஆண்டு நினைவு நாளுக்காக 12 நவம்பர் 2022 சனிக்கிழமை அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி அரியதுரை சரஸ்வதி அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 5வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி புஸ்பராணி இராமச்சந்திரன்

பருத்தித்துறையை பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி புஸ்பராணி இராமச்சந்திரன் அவர்களது ஐந்தாவது ஆண்டு நினைவு நாள் 16 நவ 2022 புதன்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளு க்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி புஸ்பராணி இராமச்சந்திரன் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினர் உறவினர்கள் நண்பர்கள் ஆகியோருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## சிறப்பு உணவு வழங்கிய பிரான்ஸ் வாழ் தமிழ் குடும்பம்





முல்லைத்தீவில் அமைந்துள்ள அன்பு இல்லப் பிள்ளைகளுக்கு கந்தரோடை மக்கள் ஒன்றியம் கனடாக்கிளையால் 12 நவம்பர் 2022 சனிக்கிழமை சிறப்பு உணவு வழங்கப்பட்டுள்ளது. பிரான்ஸில் வாழ்கின்ற திரு புவிந்தன் குடும்பத்தினர் திருமதி அரியதுரை சரஸ்வதி அவர்களது பத்தாவது ஆண்டு நினைவாக அதனை வழங்கினார்கள்.

கந்தரோடை மக்கள் ஒன்றியம் கனடாக் கிளையினூடாக இக் குழந்தைகளுக்கு உணவு, உடை, கற்றல் உபகரணங்கள் போக்குவரத்து வசதிகள் போன்ற அடிப்படை தேவைகளுக்கு உதவ ஆர்வமுடையவர்கள் எம்மை தொடர்பு கொள்ளலாம். தர்மசிறி (647-328-8880) செந்தூர் (647-991-4656) சிவா (647-716-7366) கந்தரோடை மக்கள் ஒன்றித்தின் கன்னி முயற்சி வெற்றி பெறவும் அன்பு இல்லம், பாரதி இல்லம், செஞ்சோலை இல்லங்களில் வாழும் 423 குழந்தைகளின் சார்பிலும் ஈழநாடு பத்திரிகை வாசகர்கள் சார்பிலும் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.


# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு கடந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்



12 நவம்பர் 2022 சனிக்கிழமை சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி அரியதுரை சரஸ்வதி அவர்களது பத்தாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




16 நவம்பர் 2022 புதன்கிழமை பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி புஸ்பராணி இராமச்சந்திரன் அவர்களது ஐந்தாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



17 நவம்பர் 2022 வியாழக்கிழமை யாழ்.குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும் இங்கிலாந்தை வாழ்விடமாகவும் கொண்டிருந்த பேராசிரியர் பூபதி கதிர்காமநாதன் அவர்களது மூன்றாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



17 நவம்பர் 2022 வியாழக்கிழமை அனலைதீவைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி கமலம்மா கனகசபை அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



18 நவம்பர் 2022 வெள்ளிக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு ஜெயந்தன் பரம்சோதி அவர்களது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திரு ஜெயந்தன் பரம்சோதி அவர்கள் புனிதபூமி அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



11 நவம்பர் 2022 வெள்ளிக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி நிர்மலகுமார் பிரியதர்சினி தம்பதிகளின் செல்வப்புதல்வன் கார்த்தியின் ஆறாவது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வன் கார்த்தி தனது பெற்றோர்கள் தங்கை ஜெனனியுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.


MANNAR FRIENDSHIP ASSOCIATION

Mannar Friendship Association

Mannar Night 2022

(Celebrating 19th and 20th in our 21st Year)

Location: New Jaasmin Banquet Hall and Convention Centre

90 Nolan Court, Markham, ON L3R 4L9, Canada

Date: Saturday, November 19, 2022

Time: 6:00pm

www.MFAonline.ca

Contact:

Sylvester Nicholas

Cell: 647 302 4636

Office: 416 613 4965

Mike Xavier : 647 839 6829

ஈழமுரசு

ஈழமுரசும்
கனடா வாழ் தமிழ் மக்களும்
பெருமையுடன் கொண்டாடும்
தமிழீழத் தேசியத் தலைவர்
மேதகு வே.பிரபாகரன்
அவர்களின்



தலைவன்
பிறந்தநாள்
அதுவே
தமிழன்
நிமிர்ந்த நாள்!

வீழ்ந்து விடாத
வீரம்
மண்டியிடாத
மானம்

# 68

# அகவை விழா

இருப்பாய்
தமிழா
நெருப்பாய்!

## மாவெரும் எழுச்சி விழா


2022
நவம்பர்
26
சனிக்கிழமை
மாலை
5 மணி

இடம்:
Metropolitan Centre
3840, Finch Ave East;
Scarborough ON., M1T 3T4
(Kennedy & Finch)

ஈழமுரசின் விசேட இணைப்பில் தேசியத்தலைவரிற்கு வாழ்த்து தெரிவிக்க விரும்பின் தொடர்புகொள்ளவும்

தொடர்புகளுக்கு: (647) 657 8566, (647) 783 3466







# கனடா ஸ்ரீ ஐயப்பன் இந்து ஆலயம்
# CANADA SRI AYYAPPAN HINDU TEMPLE

635 MIDDLEFIELD ROAD, SCARBOROUGH, ON, M1V 5B8 TEL: 416-321-6104 | www.ayyappan.ca

## மண்டல மகர விரத விஞ்ஞாபனமும் ஐயப்பன் மாலை அணியும் வைபவமும்

### காலம் 16-11-2022 புதன்கிழமை முதல் 21-01-2023 சனிக்கிழமை வரை

ஐயப்பன் மெய்யடியார்களே!

கலியுகத்தில் தர்மம் குன்றி அதர்மம் மேலிட்டு துன்ப சாகரத்தில் உழலும் வேளையில் தன்னை நாடி வந்த பக்தர்களை கைவிடாத தெய்வம், பட்ட பந்தம் அணிந்து சின்முத்திரைகாட்டி நிராயுதபாணியாய் காட்சி தந்து நெஞ்சுருகி, நெஞ்சுருக வைத்து எம்மை அயராது ரட்சிக்கும் பகவான் ஐயப்பன். ஸ்காபரோ - 635 மிடில்பீல் றோட்டில் அமைந்துள்ள கனடா ஸ்ரீஐயப்பன் இந்து ஆலயத்தில் மண்டல மகர விரத மாலை அணியும் வைபவம் 16.11.2022 புதன்கிழமை அதிகாலை 4.00 மணிக்கு கணபதி ஹோமம், தொடர்ந்து சாஸ்தா ஹோமம். அதிகாலை 5.00 மணிமுதல் இரவு 8.00 மணிவரை புனித துளசிமாலை அணியும் வைபவம் இடம் பெறும். மாலை அணிந்து விரதமிருக்க விரும்பும் அடியார்கள் தங்கள் பெயர்களை முன்கூட்டியே ஆலய காரியாலயத்தில் கட்டாயம் பதிவு செய்து கொள்ளவும்.

### தினமும் இரவு 9.15மணிக்கு ஹரிவராஸன பூசை இடம் பெறும்.

**வனதேவதை, பூஜை** - 15-11-2022 செவ்வாய்க்கிழமை மாலை 6.00 மணி

**விசேட ஹோமம் - மாலை அணிதல்** - 16-11-2022 புதன்கிழமை -அதிகாலை 4.00 மணிக்கு கணபதி ஹோமம், தொடர்ந்து சாஸ்தா ஹோமம். துளசி மாலை அணியும் வைபவம் அதிகாலை 5.00 மணிமுதல் இரவு 8.00 மணிவரை இடம் பெறும்

**சுவாமிமார்களின் விளக்குப்பூசை**
25-11-2022 வெள்ளிக்கிழமை, 26.11.2022 சனிக்கிழமை ஆகிய இருதினங்களும் மாலை 5.00 மணி முதல் மாலை 7.00 மணி வரை இடம் பெறும்.

**ஆஞ்சநேய யாகம்** - 27-11-2022 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 முதல் 11.00 மணி வரை நடைபெறும்.

**சுவாமிமார்களின் இலட்சார்ச்சனை**
02.12.2022 வெள்ளிக்கிழமை, 03.12.2022 சனிக்கிழமை ஆகிய இரு தினங்களும் காலை 10.00 மணி முதல் மதியம் 12.00 மணி வரையும், மாலை 6.00 மணி முதல் மாலை 7.00 மணி வரையும் இடம் பெறும்.

**1008 கலச சங்காபிசேகம்** - 11-12-2022 ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிக்கு இடம் பெறும்.

**பால்குட அபிஷேகம்** 18-12-2022 ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணி முதல் 11.00 மணிவரையும், மாலை 6.00 மணி முதல் மாலை 7.00 மணிவரையும் இடம் பெறும்.

**புலிப்பால் வேட்டை** - 18-12-2022 ஞாயிற்றுக்கிழமை மதியம்

**நாகராஜ உற்சவம் - சர்ப்ப சாந்தி** - 18-12-2022 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி முதல் மதியம் 12.00 மணி வரையும் இடம் பெறும்.


**ஆஞ்சநேயர் ஜெயந்தி**
23.12.2022 வெள்ளிக்கிழமை காலை 9.00 மணி முதல் 11.00 மணி வரை யாகம், அபிஷேகம், பூஜை நடைபெறும்.

**நெய் நிரப்புதல், இருமுடி கட்டுதல், படி ஏறி அபிஷேகம் செய்தல்ச பேட்டை துள்ளுதல்**
25-12-2022 ஞாயிற்றுக்கிழமை, 26.12.2022 திங்கட்கிழமை ஆகிய தினங்களில் அதிகாலை 4:00 மணி முதல் மாலை 3:00 மணி வரையும் இடம் பெறும். தொடர்ந்து 27.12.2022 செவ்வாய்க்கிழமை தொடக்கம் 31.12.2022 சனிக்கிழமை வரை காலை 8:00 மணி முதல் காலை 11:00 மணி வரையும் இடம் பெறும்.

**மஞ்சமாதா திருவிழா, புஷ்பாபிசேகம்**
01-01-2023 ஞாயிற்றுக்கிழமை முதல் 14-01-2023 சனிக்கிழமை வரை.

**மகர சங்கிராந்தி, திருபாபரணம், மகரஜோதி தரிசனம், பூச்சொரிதல், தைப்பொங்கல்**
14-01-2023 சனிக்கிழமை

**வைரவர் மடை, வனபூஜை, குருதிபூஜை, வேண்டுதல் நிறைவேற்று உற்சவம்**
21-01-2023 சனிக்கிழமை மாலை 6.00 மணிக்கு இடம் பெறும்.



அடியார்கள் புனிதமான ஐயப்பன் மகரமண்டல பூசைக்காலத்தில் பக்தி சிரத்தையுடன் காலை, மாலை நடைபெறும் ஐயப்பூசை விழாக்களில் கலந்து கொள்வதுடன் முடிந்தவரை மண்டலபூசை உபயங்களை பொறுப்பேற்று சிறப்பித்து ஐயப்ப பெருமானின் திருவருளைப் பெற்றுய்யும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

### பக்தர்களுக்கு முக்கிய அறிவித்தல்கள்

1. மாலை அணிதல் 16.11.2022 புதன்கிழமை அதிகாலை 5:00 மணிக்கு ஆரம்பமாகும்.
2. கைத்தொலைபேசியை ஆலயத்தினுள் பாவிக்க வேண்டாம்.
3. ஆலயத்தினுள் புகைப்படம், வீடியோ எடுப்பது தடை செய்யப்பட்டுள்ளது என்பதனையும் அனைவருக்கும் பணிவுடன் அறியத்தருகின்றோம்.

- இறை சேவையிலுள்ள ஆலய அறங்காவலர் சபை

# SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

## Real Estate
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

## Family Law
- Divorce
- Custody & Support

## Estate Law
- Power of Attorney
- Wills & Estate Administration

## Immigration Law
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

## Business Law
- Incorporations
- Purchases
- Sales & Leases

**Sasitharan Law Professional Corporation**
10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca

Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

# Serving the Tamil Community
OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

## *At Need Funeral Arrangements*

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial* • *Cremation*



**Vilosanan Sivatharman**
Funeral Director
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



**Christeen Seevaratnam**
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

## *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com


மனம் பூரிக்க மங்களகரமான மனையை தேர்ந்தெடுங்கள்
வீடு
வாங்க..
விற்க..
Ravi. Paramu
Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife Today Realty Inc., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto - ON., M1P 4S6


RANJANI THIRUKESWARAN LAW OFFICE
• Real Estate: வீடு, காணி கொள்வனவு விற்பனைச் சட்டம்
• Business Law: வியாபார, வர்த்தகச் சட்டம்
• Immigration Law: குடிவரவு, அகதிச் சட்டம்
• Family Law: குடும்ப வழக்குகள்
• Last Wills: உயில் தயாரித்தல்
• Power of Attorney: தத்துவப் பத்திரம் தயாரித்தல்
2855 Markham Road Suite 209
Toronto -ON- M1X 0C3
(Markham / McNicoll )
416 291 2242
Ranjani Thirukeswaran
(Barrister & Solicitor)


மருத்துவ பரிசோதனையற்ற காப்புறுதி
NON-MEDICAL INSURANCE
நாளை பற்றி கவலையை தவிர்க்க நம்பிக்கையானது காப்புறுதி ஒன்றே!!!
ARUN KULASINGAM
FINANCIAL ADVISOR
416-357-2847
kulasingam33@yahoo.ca
KABIS
• Life Insurance
• Critical Illness
• Disability
• RESP
• RRSP
• Mortgage Protection Insurance
• Travel Insurance (Super Visa)
Foresters
INDUSTRIAL ALLIANCE
Assumption Life


OVER 10 YEARS EXPERIENCE
RAVI VEERASINGAM B.A
Sales Representative
416-356-8958
BUY - SELL - LEASE - INVEST
HOMELIFE
ARVIN-KING
Broker
416-200-7001
TALENT - PATIENCE
HomeLife/Future Realty Inc., Brokerage*


RENOWNED FOR
AUTHENTIC KANCHIPURAM
SILK SAREES
$599*
FLAT RATE
Aalayaa
2 VILLA ADA DRIVE,
MARKHAM, ON L6B 1N7
1.855.575.0500


உங்களிடம் ..
திருப்பிச் செலுத்தப்பட வேண்டிய கடன் இருக்கிறதா?
வணிக உரிமையாளர்களுக்கும்
சுயதொழில் செய்வோருக்கும்
மகிழ்ச்சியான செய்தி!
உங்கள் வருமான மதிப்பீடுகள் இல்லாமல்
மாதந்தோறும் $5000 வரை அங்கவீனக்
காப்பீட்டுத் தொகையைப் பெற முடியும்.
விபரங்களுக்கு அழையுங்கள்
அஜித் சபாரட்ணம்
647-401-5800
416-439-2800
10 Thornmount Dr, Scarborough, ON M1B 3J4.